**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 376/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 01.07.2025.**

| | |
|---|---|
| **Name : மணிகண்டன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து தறி வீட்டில் வைத்து ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் பழனிசாமியின் பட்டறையில் வேலை செய்து வந்தார்கள். 02.07.2023ம் தேதி மாலை 6.30 மணியளவில் நான் காமாட்சியம்மன் கோயில் அருகே நடந்து வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் தெவிடியா பையா, கண்டார ஒலி என்று கெட்ட வார்த்தையால் பேசினார்கள்.

2) வீரமணி என்பவர் ஒரு பெண்ணை காதல் செய்து வந்தார். பட்டறை உரிமையாளருக்கு தெரிந்து வீரமணியை வேலையை விட்டு நிறுத்தினார்கள். இது நான் சொல்லி தான் நடந்தது என்று வீரமணி கோவத்தில் இருந்தார். வீரமணி என்னிடம் இரண்டு வாரத்திற்கு முன்பாக என்னை பேசி திட்டிவிட்டார். வீரமணி என்பவர் கையில் கூர்மையான பீங்கான் போன்ற வடிவமுள்ள கண்ணாடி துண்டு எடுத்து என் தகப்பனாரை நெஞ்சில் குத்தி கீறல் காயம் ஏற்படுத்தினார்.

3) சம்பவ சமயத்தில் நான், மாமா, ராஜன்னன், என் அப்பா வெங்கடேசன் ஆகியோர் இருந்தோம். என்னை குத்த வரும் சமயத்தில் என் அப்பா தடுக்கும்

போது அவருக்கு காயம் ஏற்படுத்தினார்கள். பின்னர் ஜீவா, மௌலி, அஜித் மூவரும் சேர்ந்து கையால் என்னை முதுகில் அடித்தார்கள். காயம் பட்ட என் தகப்பனாரை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றும் பிறகு நான் தனியார் மருத்துவமனைக்கு என் தகப்பனாரை அழைத்து சென்று சிகிச்சை அளித்தேன். நான் என் தகப்பனார் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் இருந்த போது போலீசார் வந்து விசாரித்த போது என் தகப்பனார் முடியாத நிலையில் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் திறந்த நீதிமன்றத்தில் உள்ள உடைந்த கண்ணாடி பாட்டிலால் தான் என் தகப்பனாரை எதிரிகள் குத்தி காயம் ஏற்படுத்தினார்கள் என்று சாட்சி அடையாளம் காட்டினார். கண்ணாடி துண்டு **சா.பொ.1** ஆகும். ஆஜர் எதிரிகள் தான் என்னை அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

4) பழனிசாமி பட்டறை என்பது என் வீட்டிற்கு அருகில் உள்ளது என்றால் ஆமாம். எதிரி வீரமணி பட்டறையில் வேலை செய்த விவரம் எனக்கு முழுக்க தெரியும் என்றால் ஆமாம். எனக்கும் அவர் காதலித்து வந்த பெண்ணுக்கும் இடையே எனக்கு பொறாமை இருந்ததால் வீரமணியை வேலையை விட்டு நிறுத்திவிட்டேன் என்றால் இல்லை. எனக்கும் அந்த பெண் மணிக்கும் தொடர்பு ஏதும் இல்லை.

5) மலர், மண்ணன் என் உறவினர் என்றால் ஆமாம். சம்பவ சமயத்தில் அர்ஜுனன், ராஜ்குமார் இல்லை என்றால் ஆமாம். பொது கழிப்பிடத்தில் ஆஜர் எதிரிகள் வாகனத்தை நிறுத்தியிருந்தார்கள் என்றால் சம்பவயிடத்தில்

நிறுத்தியிருந்தார்கள். பொது கழிப்பிடத்திற்கும் கோவிலுக்கும் இடையில் சொற்ப அளவு தூரம் என்றால் ஆமாம்.

6) பொது கழிப்பிடத்திற்கு வரும் நபர்கள் இரு சக்கர வாகனத்தை பொதுவாக அங்கு நிறுத்துவது வழக்கம் என்றால் ஆமாம். அந்த இடத்தில் மாலை நேரங்களில் குடிப்பதற்கு என பயன்படுத்தி வருகிறார்கள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். அந்த இடத்தில் குடித்துவிட்டு பாட்டிலை வீசி விடுவார்கள் என்றால் ஆமாம். மலர் மண்ணன் நான் எதிரிகளை பார்க்கும் போது இல்லை என்றால் இருந்தார்.

7) சம்பவயிடத்தில் நான் அர்ஜுனன், ராஜ்குமார் ஆகியோர் மட்டும் இருந்தோம் என்றால் ஆமாம். மலர் மண்ணன் மற்றும் கோபி இருவரும் அந்த இடத்தில் இல்லை என்றால் ஆமாம். எனது புகாரில் அருகிலிருந்தவர்கள் என்று சொல்லியுள்ள நிலையில் யார் யார் என சொல்லவில்லை என்றால் ஆமாம்.

8) இந்த வழக்கிற்காக என் உறவினர்களை காவல் துறையின் விசாரணையின் போது தான் சாட்சியாக சேர்த்தேன் என்றால் சரியல்ல. சாட்சி ராஜு என்பவரின் வாக்குமூலத்தை காவல் துறையினர் பெற்றிருந்தார்கள் என்றால் சரிதான். முருகேசன் மகன் கோபி என்பவர் என் உறவினர் இல்லை என்றால் ஆமாம். என் அப்பாவை அரசு மருத்துவமனைக்கு மலர் மண்ணன் என்ற என் மாமாவும் நானும் அழைத்து சென்றோம் என்றால் ஆமாம்.

9) காவல் துறையினர் மீண்டும் சம்பவயிடம் வந்து விசாரணை செய்த போது நான் இல்லை. போலீசார் சம்பவயிடம் வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது ஆனால் அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தனர். மற்ற சாட்சிகளை விசாரித்த விவரமும் யார் யார் விசாரித்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

10) என்னிடம் வாக்குமூலம் வாங்குவதற்கு முன்பாக நான் மருத்துவமனையில் இருந்ததற்கு முன்பாக போலீசார் சம்பவயிடம் சென்று விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. இரவு 9 மணிக்கு தான் காவல் துறையினர் சம்பவயிடம் வந்தார்கள் என்று சொல்வது சரியா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மலர்

மண்ணன் என்பவர் பள்ளக்காட்டில் உள்ள போயர் தெருவில் வசிக்கிறார் என்றால் ஆமாம்.

11) சம்பவயிடத்திற்கும் அவர் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒரே வீதி தான். நந்தவனதெரு என்பதும் போயர் தெரு என்பதும் ஒன்று தான் என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் இருந்ததாக குறிப்பிட்டுள்ள ராஜு என்பவர் வீடு சுமார் 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் ஏற்கனவே ஊர் தகராறு முன்விரோதம் இருந்தது என்றால் ஆமாம். வாத்திப்பட்டி என்ற ஊர் எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. எந்த காயமும் எனக்கு ஏற்படவில்லை என்றால் ஆமாம். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் சேரவில்லை என்றால் ஆமாம்.

12) ஆம்புலன்ஸ் வாகன பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் 108 ஆம்புலன்ஸ் ஆகும். அதன் ஓட்டுநரை அடையாளம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை என்றும் காதல் விவகார முன் விரோதம் காரணமாக எதிரிகள் பொது கழிப்பிடத்தில் வந்ததை வைத்து நாங்கள் அவர்களிடம் பிரச்சனை செய்தோம் என்றால் இல்லை. என் தந்தை தானாக கீழே விழுந்து பாட்டிலால் காயம் ஏற்படுத்திக் கொண்டார் என்றால் அவ்வாறு இல்லை. ரத்த கறை பாட்டிலில் உள்ளதா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 376/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 01.07.2025.**

| Name : வெங்கடேசன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சூரப்பள்ளி கிராமம் நந்தவனதெருவில் குடியிருந்து தறி தொழில் செய்து வருகிறேன். எனக்கு ஒரு மகன் அவர் பெயர் மணிகண்டன் ஆகும். என் மகன் வீட்டிலேயே தறி போட்டு ஓட்டி வருகிறார். வீரமணி என்பவர் பழனி என்பவரிடம் தறி ஓட்டி வந்து பிறகு நின்றுவிட்டார். என்ன காரணத்திற்காக நின்றார் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். 2023ம் வருடம் மாலை 6.30 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது என் மகனை அடிப்பதற்காக வீரமணி மற்றும் மூன்று பேர் காமாட்சியம்மன் கோயில் அருகே வந்தாக சொன்னார்கள். என் மகன் தறிபட்டறையிலிருந்து நடந்து வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் இரண்டு இரு சக்கர வாகனத்தில் வந்து என் மகனை அடிக்க சொன்னார்கள்.

2) நான் சண்டையை விலக்க சென்ற போது வீரமணி என்பவர் கையில் கூர்மையான கண்ணாடி துண்டு எடுத்து என் நெஞ்சில் குத்தி கீறல் காயம் ஏற்படுத்தினார். பிறகு என் மகன் மற்றும் அர்ஜுனன் மற்றும் ராஜ்குமார் வந்து விலக்கிவிட்டார்கள். என் நெஞ்சில் குத்தியதால் ரத்த குழாய் உடைந்து அதிக ரத்தம் வெளியேறியது. காயம் பட்ட என்னை ஜலகண்டாபுரம் அரசு

மருத்துவமனைக்கு சென்று பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றும் பிறகு என் மகன் என்னை கோயம்பத்தூரில் உள்ள மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். நான் மூன்று மாதம் சென்னை ராஜுவ் காந்தி அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன். நான் மயக்க நிலையில் இருந்த போது என் மகனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் திறந்த நீதிமன்றத்தில் உள்ள உடைந்த கண்ணாடி பாட்டிலால் தான் என்னை எதிரி வீரமணி குத்தி காயம் ஏற்படுத்தினார் என்று சாட்சி அடையாளம் காட்டினார். ஆஜர் எதிரிகள் தான் என்னை அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) அரசு மருத்துவமனையில் இருந்த போது காவல் துறை என்னை விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. நான் காவல் துறையிடம் விசாரித்த போது சொல்லவில்லை என்றால் மூன்று அரசு மருத்துவமனையிலும் சொன்னேன். நான் கொடுத்த வாக்குமூலத்தை வைத்து முதல் தகவல் அறிக்கை பதியவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை.

4) என் மகனிடமும் வாக்குமூலம் பெற்றார்களா என்றால் வாங்கியுள்ளார்கள். ஜலகண்டாபுரம் மருத்துவமனையில் மணிகண்டனிடம் வாக்குமூலம் பெறவில்லை என்றால் வாங்கினார்கள். அவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் ஆமாம். என் மகனுக்கும் வீரமணி காதலிக்கும் ஏற்கனவே தொடர்பு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

5) கோட்டைமேடு வாத்திப்பட்டி வீட்டிற்கும் நந்தவன தெருவிற்கும் ஏற்கனவே ஊர்தகராறு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் மகன் ஊர்தகராறு உள்ளதாக சொல்வது தவறு என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என்

மகனை ஏன் அடிக்கிறீர்கள் என்று சொல்லி சம்பவயிடத்திற்கு நான் சென்றேன் என்று சொன்னால் சரிதான். என்ன சண்டை என கேட்க சென்றேன்.

6) என்னை அடிப்பதற்கு முன்பாக எதிரிகள் என் மகன் மணிகண்டனை அடித்தார்கள் என்றால் சண்டை நடக்கும் நிலையில் இருந்தார்கள். நான் சண்டையை விலக்க சென்றேனா என்றால் ஆமாம். என் விசாரணையில் என் மார்பில் குத்தி கிழித்துவிட்டதாக சொன்னது தவறு என்றால் சரியல்ல. என் கையில் எந்த காயமும் இல்லை என்றால் ஆமாம்.

7) மலர்மண்ணன் இந்த தகராறின் போது தடுக்கவில்லை என்றால் சம்பவயிடத்தில் இருந்து தடுத்தார். மலர்மண்ணனுக்கு காயம் ஏதும் இல்லை என்றால் ஆமாம். மலர் மண்ணன் சம்பவயித்தில் இல்லை என்றும் உறவினர் என்பதால் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டவுடன் உறவினரான மலர்மண்ணன் என்பவரை சாட்சியாக காவல் துறைக்கு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

8) வீரமணிக்கும் என் மகனுக்கும் ஏற்கனவே காதல் தகராறு இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. எதற்காக பட்டறையை விட்டு வீரமணியை நிறுத்தினார்கள் என்றால் வெளியூரில் உள்ள நபர் உள்ளூரில் உள்ள நபரை காதல் செய்ததால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் ஆமாம். அந்த காதல் பெண் பெயர் தெரியுமா என்றால் அவரது அம்மா பெயர் லட்சுமி. லட்சுமி சம்பவத்தை நேரில் பார்த்தாரா என்றால் எனக்கு தெரியாது.

9) அடிப்பட்டவுடன் மயக்க நிலையில் சென்றுவிட்டேனா என்றால் கீழே விழுந்துவிட்டேன். எந்த வாகனத்தில் என்னை அழைத்து சென்றார்கள் என்றால் இரு சக்கர வாகனத்தில் அழைத்து சென்றார்கள். யார் என்னை அழைத்து சென்றார்கள் என்றால் மலர்மண்ணன் மற்றும் ராஜு இருவரும் அழைத்து சென்றார்கள்.

10) என் வாக்குமூலத்தில் அருகிலிருந்தவர்கள் என்னை மருத்துவமனையில் சேர்த்ததாக சொல்லியுள்ளேன் அந்த புகாரில் யார் யார் இருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். காதல் விவகாரத்தில் ஏற்பட்ட

இந்த தகராறின் காரணமாக தான் என் மகன் மணிகண்டன் அவருடைய கூட்டாளிகளான மலர்மண்ணன், ராஜி, நான் அனைவரும் சேர்ந்து எதிரிகள் பொது கழிப்பிடத்திற்கு வந்த போது ஊர் தகராறை மனதில் வைத்து அடித்தோம் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் கண்ணாடியில் ரத்த கறை படிந்துள்ளதா என்றால் இல்லை. எப்போது எடுத்து கொடுத்தார்கள் என்றால் அதை எடுத்து கொடுத்தவர்களை தான் கேட்க வேண்டும். எத்தனை மணிக்கு எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் சாக்கடையில் இருந்து எடுத்ததாக சொன்னார்கள். எதிரிகள் கண்ணாடியில் குத்தவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. நான் மது அருந்திவிட்டு தடுமாறி கீழே விழுந்து தானாக காயம் ஏற்படுத்திக் கொண்டு எதிரிகள் மீது பழிபோடுகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 376/2024**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 01.07.2025.**

| | |
|---|---|
| **Name : ராஜ்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக மாலை 5.30 மணியளவில் நான் பொது கழிப்பிடத்தை விட்டு வெளியே வந்து வாசலில் நின்று கொண்டிருந்தேன். அப்போது ஆஜரிலுள்ள நான்கு நபர்கள் மற்றும் மற்றொரு நபர் நின்றிருந்தனர். இவர்கள் இரண்டு இரு சக்கர வாகனத்தில் வந்து மணி என்பவரிடம் தகராறு செய்தார்.

2) பிறகு தகராறு ஏற்பட்ட சமயத்தில் வெங்கடேசன் என்பவர் அவர் வீட்டிலிருந்து நடந்து வந்து எதிரிகளுக்குள் கைகலப்பு ஏற்பட்டது. அ.சா.2 எதுவாக இருந்தாலும் பேசிக் கொள்ளலாம் என்று சொன்னார். ஆனால் ஒரு நபர் என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 ஆல் வெங்கடேஷ் என்பவருடைய நெஞ்சு பகுதியில் குத்தி கீறி காயம் ஏற்படுத்தினார். சம்பவமானது பொது கழிப்பிடத்திற்கு முன்பாக நடந்தது. ஆஜரிலுள்ள நபர்கள் அப்போது அங்கிருந்து ஓடினார்கள். யார் கிழித்தார்கள் என்பது கூட்டதிலிருந்த போது நான் பார்க்கவில்லை.

3) ஆஜரிலுள்ள எதிரிகள் கெட்ட வார்த்தையால் கேனபுண்டை என்று பேசினார்கள். உன்னால் தான் பிரச்சனை வந்து என்று சொல்லி திட்டினார்கள்.

பிறகு வெங்கடேஷ் என்பவரை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) பள்ளக்காட்டு பகுதியை சேர்ந்த உறவினர் அர்ஜுனன் என்று நான் கூறவில்லை என்றால் சரிதான். மணிகண்டன் எனக்கு பழக்கமா என்றால் மலர்மண்ணன் என் நண்பர். மலர் மண்ணன் நண்பர் என்பதால் அவரது மாமனார் மற்றும் மருமகனை எனக்கு தெரியும் என்றால் ஆமாம். வாத்திப்பட்டி, நந்தவனதெரு ஊருக்குள் ஏற்கனவே தகராறு உள்ளது என்றால் உள்ளது.

5) ஆஜர் எதிரிகளுக்குள் காதல் தகராறு இருந்தது என்றால் எனக்கு தெரியாது. வீரமணி காதல் செய்தது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் ஆமாம். காதல் விவகாரம் சம்மந்தமாக ஊருக்குள் பேசிமுடித்துவிட்டார்கள். சம்பவத்திற்கு முன்பாகவே காதல் விவகாரம் சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது என்றால் ஆமாம். நான் பாத்ரூமில் இருந்து வெளியே வரும் போது கூட்டமாக இருந்தார்கள் என்றால் ஆமாம்.

6) இருபுறமும் சண்டை சச்சரவு, கைகலப்பு ஏற்பட்டது என்றால் ஆமாம். எதிரிகளையும் மணிகண்டன் தரப்பு தாக்கினார்கள் என்றால் ஆமாம். எனக்கும் இந்த தகராறிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் ஆமாம். அ.சா.2 என் மாமனார் என்றால் இல்லை. காதல் விவகாரத்தில் அ.சா.1, அ.சா.2, மலர்மண்ணன் சேர்ந்து பொது கழிப்பிடத்திற்கு வந்த எதிரிகளிடம் தகராறு செய்தோம் என்றால் சரியல்ல.

7) காதல் விவகாரம் சம்மந்தமாக ஊரில் உள்ள பெண்களை கேட்டால் தான் தெரியும் என்றால் சரிதான். ஊரில் பெண்களை யாரையாவது போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அவர்களது சாட்சியத்தை காவல் துறையினர் பதிவு செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. அ.சா.2க்கு கையில் எதுவும் காயம் ஏற்படுத்தவில்லை என்றால் ஆமாம். அ.சா.1க்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றால் ஆமாம். அ.சா.1யை அடிக்கவில்லை

என்றாலும் ஆமாம். ஆஜரிலுள்ள நான்கு நபரை தவிர ஒரு நபர் ஓடியதாக சொல்லப்படும் நிலையில் அந்த நபர் தான் கிழித்துவிட்டார் என்றால் இல்லை. ஏன் அவரை துரத்தி பிடிக்கவில்லை என்றால் ஆளுக்கு ஒரு பக்கம் ஓடிவிட்டார்கள்.

8) யார் யார் அ.சா.2யை தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால்  சொல்ல முடியாது. காதல் விவகாரம் சம்மந்தமாக ஊர் பிரச்சனை ஏற்பட்டு அதனால் எதிரிகளை பழிவாங்க வேண்டி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 376/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 01.07.2025.**

| | |
|---|---|
| **Name : மலர்மண்ணன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து பூகடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். கடந்த 02.07.2023ம் தேதியன்று மாலை 5.30 மணியளவில் நான் பொது கழிப்பிடம் அருகே இருந்த போது ஆஜர் எதிரிகளும் அ.சா.1ம் சத்தம் போட்டு கொண்டிருந்தார்கள். நான் அந்த இடத்திற்கு வந்த போது அவர்களை வேடிக்கை பார்த்தேன். ஆஜரிலுள்ள எதிரிகள் இரண்டு இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள். என் மாமனார் அ.சா.2 அந்த பகுதிக்கு சத்தம் கேட்டு வந்து சண்டையை விலக்கிவிட்டார். அ.சா.2யை ஆஜரிலுள்ள வீரமணி என்பவர் சா.பொ.1ஆல் நெஞ்சு பகுதியில் குத்தி கிழித்து ரத்த காயம் ஏற்படுத்தினார். பிறகு காயம் பட்ட என் மாமனாரை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம். பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கும் அதன் பிறகு கோயம்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்து அங்கு உள்நோயாளியாக ஒரு மாதம் சிகிச்சை பெற்றார்.

2) கடந்த 02.07.2023ம் தேதியன்று மாலை 7.30 மணிக்கு ஜலகண்டாபுரம் காவல் துறையினர் அந்த சம்பவயிடத்திற்கு வந்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் கோபி இருவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது

தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். நான் கண்ணாடி மற்றும் கட்டையை போலீசாரிடம் எடுத்துக் கொடுத்தேன். ஒரு கண்ணாடி சாக்கடைக்குள் இருந்து எடுத்து கொடுத்தும், கட்டையை சம்பவ இடத்திலிருந்து எடுத்து கொடுத்த போது காவல் ஆய்வாளர் அதனை சாட்சியாக நான் மற்றும் கோபி இருவர் இருந்த போது கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும்.

3) அதே சமயம் இரண்டு இரு சக்கர வாகனங்களில் Dio Scooty, white color pulsar வாகனத்தை போலீசார் கைப்பற்றினார்கள். அதன் பதிவெண் தற்போது நினைவில்லை. கைப்பற்றுதல் மகஜரிலுள்ள விவரம் எனக்கு தெரியும். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆகும். ஆஜர் எதிரிகள் தான் என் மாமனாரை அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். எனது மாமனாரை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற சேர்த்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் என்னிடம் காட்டப்படுகிறது என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படம் அ.சா.2 காயம் பட்ட போது எடுக்கப்பட்டது. புகைப்படம் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

4) நான் ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்தில் பூ கடை வைத்துள்ளேன் என்றால் ஆமாம். நான் கடை வைத்துள்ள இடத்திலிருந்து சம்பவம் நடந்த இடம் சுமார் 250 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். வேலை நேரம் என்னவென்றால் குறிப்பாக சொல்ல முடியாது. சம்பவ தினத்தன்று நான் பகல் 12 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் சரிதான். பொது மக்கள் பலரும் இரு சக்கர வாகனத்தில் வந்து அங்கே நிறுத்தி பொது கழிப்பிடத்தை பயன்படுத்தி வருவார்கள் என்றால் சரிதான்.

5) பொது கழிப்பிடத்தின் அருகே வழக்கமாக மாலை நேரங்களில் குடித்துவிட்டு பாட்டில்களை வீசி செல்வது வாடிக்கை என்றால் இல்லை. அ.சா.2 மது

அருந்திவிட்டு பாட்டில்களை பொதுமக்கள் வீசிவிட்டு செல்வார் என்று சொன்னால் என் குழந்தைகள் அங்கு விளையாடுவதால் அந்த பகுதியில் யாரும் பாட்டிலை வீசமாட்டார்கள். ஆஜர் எதிரிகள் அ.சா.1 இருவருக்கும் இடையே காதல் விவகாரம் சம்மந்தமாக முன்விரோதம் காரணமாக நான் வாக்குவாதம் செய்து சண்டை சச்சரவு ஏற்பட்டது என்றால் அவ்வாறு இல்லை.

6) பொது கழிப்பிடத்திற்கு வந்த எதிரிகள் மேல் காதல் விவகாரம் காரணமாக எங்கள் ஊர்காரர்களும், எதிரிகளின் மேல் தாக்குதல் தொடுத்தார்கள் என்றால் சரியல்ல. மணிகண்டன் வேறு ஒரு பெண்ணை காதலிக்கிறார் என்றால் சரிதான்.வீரமணியின் காதல் விவகாரத்தில் மணிகண்டன் தலையிட்டதால் தான் இந்த சண்டை ஏற்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

7) சம்பவயிடத்தில் 5 பேர் இருந்தனர் என்றால் சரிதான். கண்ணாடியால் குத்திய நபர் ஓடிவிட்டார் என்றால் சரியல்ல. இரு தரப்பிலும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் போது அந்த தகராறின் முழுவிவரம் எனக்கு தெரியாது என்றால் சட்டையை பிடித்து சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. இருதரப்பிலும் அடிதடி நடந்ததா என்றால் அந்த அளவிற்கு நடக்கவில்லை, வாய் தகராறு ஏற்பட்டது.

8) அ.சா.2 சண்டையின் போது கீழே விழவில்லை என்றால் சரிதான். மணிகண்டனுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். அ.சா.2ன் இரு சக்கர வாகனத்தில் தான் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றால் சரிதான். ராஜு என்பவர் உடன் இருந்தார் என்றால் ஆமாம். வெங்கடேசனிடம் போலீசார் வாக்குமூலம் வாங்கினார்களா என்று தெரியாது. மணிகண்டனிடம் வாக்குமூலம் பெற்றனரா என்றால் பெற்றனர். அப்போது நான் மணிகண்டனுடன் தான் இருந்தேன்.

9) வெங்கடேசனிடம் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இரு தரப்பும் கைகலப்பில் இருந்த போது யார் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.